**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.3/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | மணிகண்டன் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 20.01.2023.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த சொத்துக்கள் எல்லாம் எப்படி வந்தது என்று நேரடியாக தெரியாது. கஸ்தூரி அம்மாள் என் அப்பாவின் அம்மா. என் அப்பாவின் அப்பா பெயர் சுப்பிரமணிய முதலியார். குரும்பபாளையம் கிராமத்தில் இருந்தார்கள். என் அப்பா கணியம்பாடி ஏரியில் விழுந்து இறந்தார். வா.த.சா.ஆ.4 ஆவணம் என் அம்மா வாங்கியது. தாவா சொத்துக்களை அபகரிக்க நாங்கள் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள திருமணப் பத்திரிக்கை ராமஜெயமுடையதே இல்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் 23 வருடங்களாக காணவில்லை என்பதால் கண்டுபிடிக்க இயலவில்லை என காணப்படுகிறது என்றால் இல்லை. இந்த ஆவணம் நாங்கள் கொடுத்த மனுவின் மீது கொடுக்கப்பட்டது என்றால் சரி. என் அம்மாவிற்கு 3 பெயர். தாசில்தார் வந்து விசாரித்தாரா என்றால் வந்து விசாரித்தார். எதிரிகளை வா.த.சா.ஆ.7 ஆவணத்தில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் என் தந்தையின் வாரிசு சான்று கேட்பதால் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. நான் வேண்டுமென்றே எதிரிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த ஆவணம் வஞ்சகமாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால்தான் அவர்களையெல்லாம் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 நீதிமன்ற உத்தரவின்படி வாங்கப்பட்டது. நான் கணியம்பாடி அரசு மருத்துவமனையில் பிறந்தேன். என் அம்மா பெயர் ஷகிலா என்றால் சரி. மற்ற இரண்டு பெயர் நான் குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல. நான் ரேஷன் கார்டு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ.16, 17க்கு மூல ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

......2

நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 12, 13 நிலத்தை வாங்கியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அவர்கள் ஆராய்ந்து பார்த்து, வில்லங்கம் பார்த்துதான் கிரயம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் சரியாகத்தான் வாங்கியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.